


# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*




VOL - 4 ISSUE - 14 Editorial : 044-42077328 / 7305837388

## TREE SAPLING PLANTATION PROGRAM...



On 14 th September 2022, Green Velachery & Rotary club of Chennai Velachery, planted 300 tree sapling along with Tamil Nadu costal ADGP & team in the open area of Marina marine coastal police station near Marina beach Chief guest of the event Dr. Sandeep Mittal I.P.S Additional Director General of police Coastal security group.

We applaud this superb initiative and appreciate each one from costal security group for their enthusiastic participation in planting trees and enhance the environment and green landscape.



## பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம்...



1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ- மாணவியருக்கான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் மாநகராட்சி, நகராட்சி, ஊரகம் (கிராம ஊராட்சி) மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப்பள்ளிகளில் (1 முதல் 5-ம் வகுப்பு வரை) படிக்கும் 1 லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவ, மாணவிகளுக்கு முதல் கட்டமாக காலை உணவு வழங்கும் திட்டத்தை ரூ.33.56 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. முதல்-அமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற பெயரில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தை 15/09/2022 (வியாழக்கிழமை) முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மதுரையில் தொடங்கி வைத்தார். மாணவர்களுக்கு காலை உணவை பரிமாறிய முதல் அமைச்சர், பின்னர் மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவை சாப்பிட்டார்.

சிற்றுண்டி திட்டம் :-

இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சிற்றுண்டி வகைகளில் ஏதாவது ஒன்றை அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் வழங்க வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது 2 நாட்களிலாவது இயன்ற அளவு அந்தந்த பகுதியில் விளையும் அல்லது கிடைக்கும் சிறுதானியங்களின் அடிபடையிலான சிற்றுண்டியை தயார் செய்து வழங்க வேண்டும்.

ஒரு குழந்தைக்கு ஒரு நாளுக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப்பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி அல்லது அதே அளவு ரவை அல்லது கோதுமை ரவை அல்லது சேமியா, அந்தந்த ஊர்களில் விளையும் சிறுதானியங்கள் மற்றும் சாம்பாருக்கான பருப்பு 15 கிராம், உள்ளூரில் கிடைக்கும் காய்கறிகள் (சமைத்தபின் 150-200 கிராம் உணவு மற்றும் 60 மில்லிகிராம் காய்கறியுடன் சாம்பார்).

சமையலுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். காய்கறிகளின் தரத்தை உறுதி செய்து கழுவி பயன்படுத்த வேண்டும். உணவை வழங்கும் முன்பு அதன் தரத்தை ஒவ்வொரு நாளும் பள்ளி மேலாண்மைக்குழு உறுதி செய்ய வேண்டும். இந்த திட்டத்தை செயல்படுத்துவதை கண்காணிக்க மாநிலம்இ மாவட்டம் மற்றும் பள்ளி அளவில் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். காலை உணவு திட்டத்தின் செயல்பாடு பற்றிய ஆய்வு மற்றும் தரவுகளின் அடிப்படையில் இனி வரும் ஆண்டுகளில் இந்த திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## WORLD PREVENTION SUICIDE DAY...



The IQAC and Counselling Cell of Guru Nanak College organised World Suicide Prevention Day on September 2022 in the college campus. Vice Principal Dr. N. C Rajashree, IQAC Coordinator Dr. Swati Paliwal, Counsellor Dr. Nafisa Jeddy, NSS Program Officers and Administrative Officer Mr. Selvaraj were present on this occasion. The programme began with a rally by the students with the slogan "No to Suicide" and other preventive measures.

The rally was followed by a mime and street play by the NSS students and dance by G Unit.

The Vice Principal Dr. N. C. Rajashree addressed the Gathering and stated that the decision to end one's life is wrong and leaves a painful mark and grief on their counterparts or family members.

Dr. Nafisa Jeddy, Counsellor spoke on how to help someone who are struggling with suicidal thoughts. Many factors such as anxiety, depression, relationship problems, eating disorders, body image issues and more have led to an increase in suicidal ideation among students. She also gave an awareness on how to help someone having suicidal thoughts.

1. Listen without judgement and offer your support, with patience and empathy
2. Encourage them to seek help from a professional
3. Stay with them if you think they are in danger
4. Implement suicide prevention policies at a state level
5. Reduce associated stigma by raising awareness for suicide and mental health
6. Train health care providers and educators in suicide prevention







# CLASSIFIED


**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT 8015427018

**WANTED**

Front Desk Executive

*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

*Contact* 9841030772

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN

ONLINE & OFFLINE

*Contact*

9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

**DESIGNING**

Tamil & English DTP designing works Rs. 750/- only

*Contact* 7305837388

**Commercial Space for Rent**

850 Square feet for 27,000/- @ ground floor

*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*

2 L as advance

CONTACT 7305837388

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

**Mother Land**

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

*Contact*

72992 62185
90947 52300

**WANTED**

*Tele Callers*

CONTACT 7305837388

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**

**Contact : 9444 122 922**


**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை


## வேளச்சேரி ஈரடுக்கு மேம்பாலம் கைவேலி 2-வது வழிப்பாதையை திறப்பு...

சென்னை: கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விஜயநகர் பேருந்து நிலையம் அருகே தரமணி - வேளச்சேரி ஈரடுக்கு மேம்பாலத்தின் ஒரு பகுதியை முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்த நிலையில், இரண்டாம் பாதையை சனிக்கிழமை (17-ந்தேதி) அன்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை வேளச்சேரி விஜயநகரில் போக்குவரத்து நெரிசலை போக்கும் வகையில் வேளச்சேரி - தரமணி, வேளச்சேரி - கைவேலி சாலைகளை இணைக்கும் வகையில் ரூ.108 கோடியில் இரண்டடுக்கு மேம்பாலம் கட்டும் பணி கடந்த 2016-ம் ஆண்டு தொடங்கப்பட்டு நீண்ட காலமாக நடைப்பெற்று வந்தது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த நவம்பர் மாதம் வேளச்சேரி - தரமணி பாதை திறக்கப்பட்ட நிலையில் தற்போது வேளச்சேரி - தாம்பரம் விரைவு சாலை வழியாக கைவேலி வரை இரண்டாம் கட்ட பாதை திறக்கப்பட்டது.



## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 4626 | 1 கிராம் | 4974 |
| | 8 கிராம் | 37008 | 8 கிராம் | 39792 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 61.60 | | |
| | 1 கிலோ | 61600 | | |

## குழந்தைகளுக்கு வேகமாக பரவும் காய்ச்சல்...

சென்னையில் புதிய வகை காய்ச்சல் வேகமாக பரவியது. இது குழந்தைகளை அதிகம் பாதிப்பதால் ஆஸ்பத்திரிகளில் கூட்டம் அதிகமாக உள்ளது.

சென்னையில் கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சலால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து கொண்டே செல்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகள், இளம் வயதினர் அதிக பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

சென்னையில் உள்ள பெரும்பாலான அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் உள்நோயாளிகள் பிரிவு நிரம்பி வழிகிறது. இதேபோல வெளிநோயாளிகள் பிரிவிலும் வழக்கத்தை விட 25 சதவீதம் பேர் கூடுதலாக காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்று செல்கிறார்கள்.

காய்ச்சல், சளி மற்றும் இருமல் ஆகியவை குழந்தைகளுக்கு பொதுவாக பரவுகிறது. காய்ச்சல் 3 அல்லது 4 நாட்களில் குறைந்தாலும், இருமல் குறைந்தது 2 வாரங்களுக்கு நீடிக்கிறது. இருமலுக்கு மருந்து கொடுத்தாலும், அது அடங்க மறுப்பதாக டாக்டர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதனால் இரவு தூங்குவதற்கு முன்பு, ஒரு தேக்கரண்டி தேன் வெது, வெதுப்பான சுடு நீரில் கலந்து குடிக்குமாறு டாக்டர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள். காய்ச்சல், சளி, இருமல் தொல்லையால் சில குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் விடுப்பு எடுத்து வருகிறார்கள்.

## Chennai's Vandalur secures top rank among India's large zoos

The Arignar Anna Zoological Park near Chennai, popularly referred to as the Vandalur Zoo, has secured top rank in India among the large zoo categories in the Management Effectiveness Evaluation (MEE-ZOO) report 2022 conducted by the Union Ministry of Environment, Forest and Climate Change.

Tamil Nadu Chief Minister MK Stalin took to Twitter Sunday and termed it a "matter of great pride" for the state that Arignar Anna Zoological Park received the highest rating in India among large zoos. He congratulated the state forest department and other officials for the achievement.

Currently, there are 147 recognized zoos in the country, categorized as large (17), medium (23), small (33), mini zoos (60) and rescue centres (14). In this phase of MEE-ZOO, zoos from the large and medium categories were selected for evaluation, of which 39 underwent the evaluation process, the Central Zoo Authority (CZA) noted.(14). In this phase of MEE - ZOO, zoos from the Large and medium categories were selected for evaluation, of which 39 underwent the evaluation process, the Central Zoo Authority (CZA) noted.

The zoos were evaluated by a committee of 15 independent experts based on six elements – context, planning, input, process, output and outcomes, officials said. In the large zoo category, Vandalur Zoo topped the chart in three of the six elements, including planning, input and output. It secured the highest MEE score of 82 per cent and was rated 'Very Good'. It is followed by Sri Chamarajendra Zoological Gardens in Karnataka and Sakkarbaug Zoological Park in Gujarat.


In the medium zoo category, Padmaja Naidu Himalayan Zoological Park in West Bengal secured the highest MEE score of 83 per cent and was rated 'Very Good', followed by Alipore Zoological Garden in West Bengal and Madras Crocodile Bank Trust/Centre for Herpetology.

The report suggested a couple of actions to be taken at the Vandalur zoo, including that it must consider Options for green energy, rainwater harvesting/water recycling and alternate sources of generation of energy. It was also suggested that as part of the ongoing conservation breeding programmes, the zoo may initiate planning for the release of animals into the wild.

"The plan should include details of genetic profiling with clear identification of founders, animal marking, animals to be released, survey of release site, soft release, community engagement around areas of release, etc," a statement noted.



# இந்த வார ராசிபலன்




**மேஷம்**

இந்த வாரம் வியாபாரிகளுக்கு தங்கள் வியாபாரத்தில் தொடர்புடைய எந்த விஷயமும், மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதை தவிர்க்கவும்.



**துலாம்**

இந்த வாரம் நீங்கள் உங்கள் நண்பர்கள் அல்லது குடும்பத்தினருடன் எங்காவது செல்கிறீர்கள் என்றால், உங்கள் பணத்தை புத்திசாலித்தனமாக செலவிட



**ரிஷபம்**

இந்த வாரம் உங்கள் நிதி நிலையை மேம்படுத்த உங்கள் மூப்பர்களின் ஆலோசனையும் அனுபவமும் மட்டுமே எதிர்காலத்திற்கு உதவியாக இருக்கும்.



**விருச்சிகம்**

இந்த வாரம் உங்கள் வீட்டின் குழந்தைகள் உங்கள் சாதனைகளைப் பற்றி பெருமைப்படுவீர்கள், இதன் காரணமாக நீங்கள் ஓரளவு உணர்ச்சிவசப்படுவீர்கள்.



**மிதுனம்**

இந்த வாரம் அலுவலகத்தில் பாசமும் நேர்மறையான சூழ்நிலையும் இருக்கும். இதுனால் உங்கள் சக ஊழியர்களிடமிருந்து முறையான ஆதரவு இருக்கும்.



**தனுசு**

இந்த வாரம் சுறுசுறுப்பான மற்றும் அன்பான நடத்தை உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு, குறிப்பாக உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.



**கடகம்**

இந்த வாரம் உங்கள் வருமானம் அதிகரிக்கும், இதன் காரணமாக எதிர்காலத்திற்காக உங்கள் பணத்தை சேமிக்கவும் திட்டமிடலாம்.



**மகரம்**

இந்த வாரம் உங்கள் வருமானம் உயரும். அந்த பணத்தை சம்பாதிக்கும் போது, அதை மீண்டும் ஒரு நல்ல திட்டத்தில் முதலீடு செய்ய முடிவு செய்யலாம்.



**சிம்மம்**

இந்த வாரம் உங்கள் குடும்ப வாழ்க்கை சாதகமாக இருக்கும். வீட்டில் உள்ள பல உறுப்பினர்கள் உங்களை மகிழ்ச்சியடையச் செய்ய முயற்சிப்பார்கள்.



**கும்பம்**

இந்த வாரம் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்வீர்கள். இந்த நேரத்தில் பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும், இது அவர்களின் சரியான ஆதரவைப் பெற உதவும்.



**கன்னி**

நீங்கள் செய்த அனைத்து வகையான சொத்து தொடர்பான பரிவர்த்தனைகளும் இந்த வாரம் முடிவடையும், இது உங்களுக்கு நன்மை பயக்கும், வெற்றி கிடைக்கும்.



**மீனம்**

இந்த வாரம் நீங்கள் உங்கள் பணியிடத்திலிருந்து சீக்கிரம் வீட்டிற்கு வர முயற்சிப்பீர்கள், அதில் நீங்கள் வெற்றியையும் பெறுவீர்கள். நல்ல பணம் சம்பாதிக்க வாய்ப்புள்ளது.

## மத்திய அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்...




மத்திய அரசின் திறன் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெற அக்.,31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் திறன் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த உதவித்தொகையை பெறும் தகுதி பெற்ற மாணவர்கள் **www.scholarships.gov.in** என்ற இணையதளத்தில் அக்டோபர் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்பப் படிவம், விண்ணப்பித்தலுக்கான தகுதி ஆகியவற்றை **www.tndce.in** இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். இளங்கலை பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.10ஆயிரமும், முதுகலை மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.20 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




**ஆன்மீக தகவல்**

# புரட்டாசி மாதம் சனிக்கிழமை விரதத்தின் மகிமைகள்

தமிழ் மாதங்களில் ஆறாவதாக இருக்கும் மாதம் புரட்டாசி. மிகவும் தெய்வீக தன்மை நிறைந்த மாதமாகவும், பகவான் விஷ்ணுவுக்கு உகந்த மாதமாகவும் இந்த புரட்டாசி மாதம் பார்க்கப்படுகின்றது.

முழு விரதம் மாதம்:

ஒவ்வொரு மாதத்திலும் சில நாட்கள் விரத நாட்களாக இருப்பது வழக்கம். ஆனால் புரட்டாசி மாதமோ, சனி விரதம், நவராத்திரி விரதம் என மாதம் முழுவதும் விரதமும், திருவிழா கோலமாக தான் இருக்கிறது.

பேருமாளை தரிசிக்க உகந்த சனிக்கிழமை:

பொதுவாக சனிக் கிழமைகளில் பெருமாளை தரிசிப்பது விசேஷமானது. அதிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை நாளில் பெருமாளை வழிபட்டால் எல்லா வித கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்க்கை கிடைக்கப் பெறுவீர்கள் என்பது இந்து மதத்தின் மரபு வழி நம்பிக்கை.

புதன் கிரகத்திற்குரிய மாதம் :

புரட்டாசி மாதம் ஒன்பது கோள்களில் ஒன்றான புதன் கிரகத்திற்கு உரியதாக பார்க்கப்படுகின்றது. புதன் பகவான், அதி தேவதையாக மகா விஷ்ணு உள்ளார். அதனால் புரட்டாசி மாத விரதமும், வழிபாடும் மகாவிஷ்ணுவின் அருளை பெற்று தரும்.

புதனின் வீடு கன்னி ராசியாகவும், அது பெருமாளின் அம்சமாக கருதப்படுகிறது. இந்த புரட்டாசி மாதத்தில் தான் கன்னி ராசியில் சூரியன் அமர்கிறார். அதனால் இந்த மாதத்தில் பெருமாளுக்கு பூஜை, வழிபாடு, பஜனை, பிரம்மோற்சவம் செய்யப்படுகிறது. சனி பகவானும், புதனும் நட்பு கிரகங்கள் என்பதால் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை மிக விஷேசமாகப் பார்க்கப்படுகின்றது.

புரட்டாசி மாதம் எமனின் கோரைப் பற்களுள் ஒன்றாக அக்னி புராணம் கூறுகிறது. இதனால் இந்த மாதத்தில் நாம் பெருமாளை வழிபாடு செய்வதால் எமபயம் நீங்கி, நல் வாழ்க்கையை பெறலாம்.

புரட்டாசி மாத விரதம்:

ஒவ்வொரு சனிக்கிழமையில் விரதம் இருந்து பெருமாளை வணங்குவது நல்லது. அப்படி விரதத்தை மேற்கொள்ள முடியாதவர்கள் புரட்டசியில் வரும் சனிக்கிழமைகளில் விரதம் இருந்து, பூஜை செய்து வழிபடுவதோடு, முடிந்த அளவிற்கு அன்னதானம் செய்தால் பெருமாளின் அருள் கிட்டும்.சனிக்கிழமை விரதத்தின் முக்கியத்தை உணர்த்தும் ஒரு கதை:

சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறப்பானது. அதிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறந்தது.பெருமாளுக்கு உரிய திருத்தலங்களில் திருப்பதி வெங்கடாசலபதி கோயில் மிகவும் உயர்வானதாக கருதப்படுகிறது. இங்கு பீமன் என்ற குயவன் வாழ்ந்து வந்தான். அவன் பெருமாளின் மிக தீவிர பக்தன். அவன் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதாக சங்கல்பம் எடுத்துக் கொண்டார்.

ஆனால் மிகவும் ஏழையான பீமன் விரதம் என்பதற்காக கோயிலுக்கு செல்லக் கூடிய சூழல் இல்லாமல், எப்போதும் பானை போன்ற மண்பாண்ட பொருட்களை செய்து வந்தான். அப்படியே கோயிலுக்கு சென்றாலும், பூஜை செய்ய தெரியாது. அப்படி ஒரு கோயிலுக்கு செல்லும் போது, சுவாமியைப் பார்த்து, "நீ எல்லாம்" என்ற வார்த்தையை மட்டும் சொல்லி விட்டு வந்துவிடுவார்.

இந்நிலையில், கோயிலுக்கு போக நேரம் இல்லாததால், பெருமாளையே இங்கு அழைத்துவிட்டால் என்ன என எண்ணினார். அதனால், அவர் களிமண்ணால் ஒரு பெருமாள் சிலையை செய்தார். அதை பூஜிக்க பூக்கள் வாங்க கூட பணம் இல்லை.

அதனால் தினமும் தன் வேலையில் மீதமாகும் சிறிதளவு களிமண்ணை வைத்து பூக்களை செய்து வந்தார்.அப்படி செய்த பூக்களை கோர்த்து, மண் பூ மாலையாக செய்து பெருமாளுக்கு அணிவித்தார். அந்த நாட்டை ஆண்ட அரசன் தொண்டைமானும் பெருமாளின் தீவிர பக்தன். அவர் சனிக்கிழமைகளில் தங்கப்பூ மாலையை அணிவிப்பார்.

அப்படி அவர் ஒருவாரத்தில் பெருமாளுக்கு தங்க பூ மாலை அணிவித்தார். மறு வாரத்தில் சென்று பார்க்கும் போது தங்க பூ மாலைக்கு பதிலாக களிமண்ணால் செய்யப்பட்ட மாலை பெருமாள் கழுத்தில் இருந்தது.

இதைப் பார்த்ததும் அங்குள்ள கோயில் அர்ச்சகர்கள், பராமரிப்பாளர்கள் மேல் சந்தேகம் அடைந்து குழப்பத்தில் ஆழ்ந்தார்.

அவர் கனவில் தோன்றிய பெருமாள், குயவனின் பக்தியால், அவனின் களிமண் மாலையை தான் ஏற்றுக் கொண்டதாகவும், குயவனுக்குத் தேவையான உதவியை செய்யுமாறு அரசனிடம் கூறினார்.

திருமாலின் ஆணைப்படி குயவன் இருக்கும் இடத்திற்கு சென்ற அரசன், அந்த பக்தரை கௌரவித்தார்.

திருமாலுக்கு நைவேத்யம்:

பெருமாள் மீது குயவன் வைத்திருந்த பக்தியை கௌரவிக்கும் பொருட்டு, தற்போதும் கூட திருப்பதியில் மண் சட்டியில் தான் நைவேத்யம் செய்யப்படுகின்றது.

# YOUNG ACHIEVER AWARD



This week VIKHYAT. K received Young Achiever Award from our Express Velachery Team.

Vikhyat is a six year old boy studying in Delhi public school, Hyderabad.Vikhyat is an inquisitive child who loves to learn about new things.
















He always seeks new challenges. He is very fast at mathematical calculations using the abacus. He is a multitalented, consistent and hard-working child who has won many National Awards in abacus, drawing, and modeling.

He has also participated in a World Record event of maths calculations. He stays very determined and focused on his goal.His parents Harikrishna Reddy (father) and Deepika (mother)came to know that he takes immense interest in maths when he was only 4 years old.

His teacher Ms. Simpy Arora encouraged him to work on abacus.They observed that he has a good speed with the calculations of maths and he can calculate much faster than the children of his age. Besides maths, he loves modeling and has a strong urge towards drawing. This is the reason that his parents have encouraged him to make the most out of all the fields he likes.



He has won the National Talented Kid Award. Not only this but he has also won the Balratna Award.

He has also bagged up many other different awards such as Smart Kid, Enchanted Kid, Best Artist, Best Motivational Kid Award, Best Blogger, And Youth Icon Award. He has also received The Phenomenal Kid Award. He has won the amazing Born to Win Award. He has also been nominated for the Star Iconic Kid's Award.

He has also been shortlisted in a Modelling Contest conducted by the Dream Catchers Pageant.

He won in drawing, handwriting and unique talent conducted by National education and human right organisation and won Most talented kid award, Kalagaurav award conducted by centre for educational development and research.





He won first prize in unique talent and third prize in drawing competition conducted by wonderbuddies. He has won third prize in summer drawing competition conducted by ground work. He won in poem recitation competition. He has won the prestigious brainiac award in solving abacus conducted by artveganza.

He won first prize in tiranga contest conducted by magikmat. He has been selected in top 10 talented kids. He was selected as a child prodigy organised by robochamps.He is a world record holder in solving abacus.

He was featured in local news channels for showing his amazing talent in different fields. He was also featured in prestigious book Rising youth superstars of India which showcase the talent of unique kids.

Our team asked about his dream , he told that he want become an IPS Officer. I am grateful for receiving this award from Express Velachery. Without parents love and support, I can't enjoy a healthy life.

***A world record holder in international book of records for solving maximum single digit addition with three addends...***








**"We are proud to present this award to this Wonder kid .**

**We hope you can feel all the pride and happiness surrounding you as you head off to your parents and your school."**

**Congratulations!**




















# Chutties Corner

## தனித்திறமை பகுதி



Wood scale " CRAFT"



*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq Public School,
Bangalore.


உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## படத்தில் உள்ள 10 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!




**Find 10 Differences ?**

## PAPER CRAFT



## What does it mean?




- The whole nine yards: everything you can possibly want, have, or do in a particular situation
  The story was interesting, but we had to leave midway. We didn't get the ***whole nine yards***.
- In touch: in or into communication.
  We stayed ***in touch*** after college.
- Up in the air: still to be settled or unresolved
  The future of the project is ***up in the air*** as the management has failed to finalize the budget.



**Dr.Mrs. Y. Deepika,**
**M.Sc.,Ph.D.,**
**Delhi Public School,**

## MY DREAM PICNIC TO VENUS

I watched a movie in Mangalyaan and got to know more about space mission. I started learning more about satellites and their travel journey to space. I learnt about orbits, galaxies, black holes and planets. I was astonished by seeing the efforts of our ISRO scientist in launching to the Mars. I learnt the value and importance of time. I respected and mesmerized at the beauty of nature. We were the first in the world to launch a satellite to Mars in first attempt at lower cost. On seeing that movie, I gained a desire to become a space scientist and to work with ISRO to launch a satellite to the Venus planet. I know it is only my first step but I assure that my dream will come true in future and our country will become a first nation team to launch satellite to Venus . I would be also proud to be an Indian Scientist and part of ISRO in this milestone mission.


After 21 years in 2049

My dream came true.


I made a history that A. SANJAY an Indian scientist was the First man to set his foot an Venus. The whole country is proud of him and salutes ISRO for his successful mission. The world countries were amazed at the space mission of India. Now, India become a developed country in the world.

*Jai Hind!*





This is my first rocket soon I will launch in VENUS



My Dream picnic to VENUS

MY FAVOURITE PLACE - VENUS - VISION - FIRST INDIAN TO LAND ON VENUS
Inspried by true story Mangalyaan

**A. SANJAY**
Today's Dreamer Future's Succeeder

## விவசாயம் காப்போம்

# சம்பங்கி பயிரிடும் முறை

சம்பங்கி நீலக்கற்றாழையை ஒத்திருக்கும். இதன் சாறு நறுமண பொருட்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் ரஜினிகாந்தா என அழைக்கப்படுகிறது. இதற்கு இரவில் மணம் என்று பொருள்.

ஒரு செடியில் இருந்து வருடத்திற்கு 20 தண்டுகள் வரைக்கும் வளர்ந்து தினம் பூக்கும் தாவரமாகும்.

எப்படி பயிரிடுவது?

இரகங்கள் :-

ப்ரஜ்வல், மெக்ஸிகன் சிங்கிள், பியர்ல்டபுள், வைபவ், சுவாளினி, ஸ்ரீகார் போன்ற இரகங்கள் சாகுபடிக்கு ஏற்றவை.

பருவம்:-

சம்பங்கி மலர் சாகுபடிக்கு ஏற்ற காலம் ஜூன், ஜூலை மாதங்கள் ஆகும்.

மண:-

நல்ல வடிகால் வசதியுள்ள வண்டல் மண் ஏற்றது. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்க வேண்டும்.

நிலம் தயாரித்தல்:-

தேர்வு செய்த நிலத்தில் 2 டன் தொழுவுரத்தை இட்டு இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். பிறகு, 150 கிலோ வேப்பம் பிண்ணாக்கை நிலம் முழுவதும் தூவி, உழவு செய்ய வேண்டும். அதன் பின் 3 அடி அகலம், முக்கால் அடி உயரத்தில் தேவைக்கேற்ற நீளம் கொண்டதாக ஒன்றரை அடி இடைவெளியில் பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

விதையளவு:-

ஏக்டருக்கு 1,12,000 கரணைகள் தேவைப்படும். கரணைகளை அறுவடை செய்து 30 நாட்கள் வைத்திருத்த பின்பே நடவுக்கு பயன்படுத்தவேண்டும்.

விதைநேர்த்தி:-

நடவிற்கு முன்பு 5000 பிபிஎம் சிசிசியில் (5 கிராம் / லிட்டர்) மூழ்கச்செய்து பின்பு கரணைகளை நடவு செய்ய வேண்டும்.

விதைத்தல்:-

தயார் செய்துள்ள பார்களில் 25 முதல் 30 கிராம் எடையுள்ள கரணைகளை 45 ஒ 20 செ.மீ இடைவெளியில் 25 செ.மீ ஆழத்தில் நடவு செய்ய வேண்டும்.

நீர் நிர்வாகம்:-

முதல் பத்து நாட்களுக்கு தினமும் தண்ணீர்விட வேண்டும். பிறகு, நிலத்தின் தன்மையைப் பொறுத்தும் காலநிலையைப் பொறுத்தும் பாசனம் செய்து கொள்ளலாம். ஆனால் சம்பங்கி வயலில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது. அதனால் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து, தேவைக்கேற்ப பாசனம் செய்ய வேண்டும்.

உரங்கள்:-

ஒவ்வொரு பாசனத்தின் போதும் 150 லிட்டர் இயற்கை உரமான அமுதக்கரைசலைக் கலந்து விட வேண்டும். நடவு செய்த 3-ம் மாதம் ஒவ்வொரு செடியின் அருகிலும் மண்வெட்டியால் பறித்து, செடிக்கு ஒரு கிலோ என்கிற கணக்கில் ஆட்டு எருவை வைத்து, மண்ணால் மூடி விட வேண்டும்.

மாதம் ஒரு முறை 25 கிலோ வேப்பம்பிண்ணாக்கு, 50 கிலோ கடலைப் பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து இட வேண்டும்.

ஏக்கருக்கு 10 டன் தொழு உரம், 20 கி.கி தழைச்சத்து தரவல்ல 44 கிலோ யூரியா, 80 கி.கி மணிச்சத்து தரவல்ல 500 கிலோ சூப்பர் பாஸ்பேட், 80 கி.கி சாம்பல் சத்து தரவல்ல 135 கிலோ மியூரேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும்.

இரண்டு மாதங்கள் கழித்து ஒரு முறையும், பின் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும், மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து ஒரு முறையும் என மூன்று முறை 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும.

பாதுகாப்பு முறைகள் ரோஜா:-

களை நிர்வாகம்சிறிய செடியாக இருக்கும்பொழுது 10 நாட்களுக்கு ஒரு முறை களை எடுக்க வேண்டும். பெரிய செடியாக வளர்ந்த பின் களை அதிகமானால் எடுக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு:-

இதில் அதிகமாக நோய் தாக்குதல் காணப்படுவது இல்லை. இதில் காணப்படும் ஒரே பிரச்சனை நூற்புழு தாக்குதல் தான்.

நூற்புழு:-

நூற்புழுவை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 5 கிலோ உயிர் பூஞ்சாணமான விரிடியை எருவில் கலந்து போடவேண்டும் அல்லது கார்போ/ப்யூரான் குருணை மருந்தினை ஒரு செடிக்கு ஒரு கிராம் என்ற விகிதத்தில் இட்டு உடனடியாக நீர்ப்பாய்ச்சவேண்டும்.

அறுவடை:-

கரணைகள் முளைத்த பின்பு 80 முதல் 95 நாட்களில் பூக்களை அறுவடை செய்யலாம். பூக்களை நாள்தோறும் அறுவடை செய்ய வேண்டும். தினசரி சந்தையில் விற்பனை செய்யலாம். பூக்களின் விலை குறையும் போது செென்ட் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு விற்பனைக்கு கொடுக்கலாம்.

மகசூல்

ஒரு எக்டருக்கு 14 முதல் 15 டன் மலர்கள் வரை கிடைக்கும்.

[244] **திருக்குறள்**

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயர் அஞ்சும் வினை.

His soul is free from dread of sins
Whose mercy serveth all beings.

## Arati Saha

## (24 September 1940 - 23 August 1994)




Arati Saha was an Indian long distance swimmer, best known for becoming the first Asian woman to swim across the English Channel in 29th September, 1959..

In 1960, she became the first Indian sportswoman to be awarded Padma Shri, the fourth highest civilian honour in India.

Born in Calcutta, West Bengal, British India, Arati had been introduced to swimming at the early age of four.

Her precocious talent was spotted by Sachin Nag, and later she was inspired by the ace Indian swimmer Mihir Sen to try to cross the English Channel.

# YOGASANAM

## BENEFITS OF SURYA NAMASKAR

- Helps with weight loss
- Strengthens muscles and joints
- Improved complexion
- Ensures a better functioning digestive system
- Helps combat insomnia
- Ensures regular menstrual cycle
- Useful in treatment of frozen shoulders
- Spinal cord and abdominal muscles are stretched
- Internal organs are massaged
- Improves flexibility of the hips
- Stimulates the Manipura Chakra
- Improves balance in the nervous system
- Reduces blood sugar levels
- Reduces stress levels
- Tones the entire body





அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை

YOGA CENTRE

Cell : 9444 122 922



# Entertainment Corner

### அறுசுவை சமையல்

## இடியாப்பம் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

- எண்ணெய் - இரண்டு டீஸ்பூன்
- பட்டை - இரண்டு
- லவங்கம் - இரண்டு
- ஏலக்காய் - இரண்டு
- பிரிஞ்சி இலை - ஒன்று
- வெங்காயம் - இரண்டு (நறுக்கியது)
- இஞ்சி பூண்டு விழுது -ஒரு டீஸ்பூன்
- பச்சை மிளகாய் - இரண்டு
- தக்காளி - ஒன்று
- காரட், பீன்ஸ், காலிபிளவர் -ஒரு கப் (நறுக்கியது)
- மிளகாய் தூள் - கால் டீஸ்பூன்
- கலர் - ஒரு சிட்டிகை (தேவையானால்)
- தண்ணீர் - அரை டம்ளர்
- உப்பு - தேவைகேற்ப
- கொத்தமல்லி - சிறிதளவு
- புதினா - சிறிதளவு
- நெய் - ஒரு டீஸ்பூன்
- இடியாப்பம் - முன்று கப்

**செய்முறை:**

- ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம், ஏலக்காய், பிரிஞ்சி இலை, வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது, பச்சை மிளகாய், தக்காளி, காரட், பீன்ஸ், காலிபிளவர், மிளகாய் தூள், உப்பு, கலர், சேர்த்து நன்றாக வதக்கி தண்ணீர் சேர்த்து ஐந்து நிமிடம் கழித்து முக்கால் பாகம் கிரைவி எடுத்து தனியாக வைத்து கொள்ளவும்.
- கால் பாகம் கிரைவின் மேல் இடியாப்பம் (பாதி) உதிரி செய்து தூவவும்.
- பிறகு முக்கால் பாகம் கிரைவி துவி விடவும், பிறகு மீதி உள்ள இடியாப்பம் துவி, கொத்தமல்லி, புதினா துவி, நெய் விட்டு கிளறாமல் மூடி போட்டு விட்டு முன்று நிமிடம் கழித்து எடுத்து சூடாக பரிமாறவும்.
- குழந்தைகளுக்கு பிடித்த டிஷ்.

குறிப்பு: முன்று நிமிடகளுக்கு மேல் விடக்குடாது. சீஸ் துருவி சூடாக பரிமாறவும்.

## விடுகதை விளையாட்டு

1. உள்ளே இருந்தால் ஓடித்திரியும் வெளியே வந்தால் விரைவில் மடியும் -அது என்ன?

2. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம். - அது என்ன?

3. என் குதிரை கறுப்புக் குதிரை குளிப்பாட்டினால் வெள்ளைக் குதிரை -அது என்ன?

4. ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்துச் சுருட்ட ஆள் இல்லை -அது என்ன?

5. ஒரு நெல் குத்தி வீடெல்லாம் உமியாயிற்று -அது என்ன?

6. அண்டாவில் இருக்கும் தண்ணி அள்ளினாலும் குறையாது -அது என்ன?


Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........

பெண் 1: என் மாமியார் உலகத்துல உள்ள மாமியார்களுக் கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டு மாதிரி....

பெண் 2: அவ்வளவு நல்லவங்களா?

பெண் 1: சீ... சீ... மாமியார் ஜோக்குகள் எல்லாத்தையும் அவங்க கடந்து நிக்குறாங்கன்னு சொல்ல வந்தேன்.

❖❖❖

தமிழரசி: ஹே.. நான் உங்க வீட்டுக்கு காலையில போயிருந்தேன்.. உங்க அம்மா பேசுனது மனசுக்கு ரொம்ப கஷ்டமா போச்சு

கார்த்திகா: அப்டியா.. என்ன சொன்னாங்க? ஏதாவது தப்பா சொல்லி இருந்தா சாரி டி

தமிழரசி: என்ன எதுவும் சொல்லல... உன்ன பத்திதான் சொன்னாங்க் நீ எங்க இருக்கன்னு கேட்டேன். அதுக்கு உங்க அம்மா, அந்த மாடு எங்கயாவது மேய போயிருக்கும்னு சொல்றாங்க..

கார்த்திகா: இவ்ளோதான் மேட்டரா... இது எப்போதும் சொல்றதுதான்.. இதுக்கே நீ மனசு கஷ்டப்படுறியே.. நான் வெளிய போயிட்டு வீட்டு வந்ததுக்கு அப்றம் எங்க அம்மா சொன்னத கேட்டா என்ன சொல்லுவியோ..

தமிழரசி: ஏன் உன்ன ஓவரா திட்டிட்டாங்களா?

கார்த்திகா: என்ன இல்ல உன்னளூ அந்த எருமை கார்த்திகா உன்ன தேடி வந்துட்டு போகுதுன்னு சொல்லிட்டாங்க...

தமிழரசி: ????

❖❖❖

சார் ஆஸ்பத்திரிக்கு எப்படி போகணும் ?
விடை: நோயோடதான்.

❖❖❖

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## இணைச்சொற்களை கண்டுபிடியுங்கள்

**துரிதம்**

------------- ------------ ------------

### சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.சீப்பு 2.தவளை 3.பலூன் 4.நண்டு 5.பொக்கை 6.வேர்க்கடலை 7.மிளகாய் 8.உலக்கை 9.பாய்

### சென்ற வார குறுக்கெழுத்துப் புதிர் விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ரு | ள் | மொ | ழி | வ | ர் | ம | ன் | | பு |
| றி | | | | | ஞ் | | ஞ் | | கீ | தை |
| வி | த | வை | | | ச | | ச | | | ய |
| ய | | | நி | ற | ப் | பி | ரி | கை | | ல் |
| ல் | | | ர் | | பு | | | க் | | |
| | தி | ரு | வா | ச | க | ம் | | கி | | க |
| தி | ரு | | க | | ழ் | | க | ளை | | ன் |
| | க் | | ம் | | ச் | | | | | னி |
| வெ | கு | ளி | | | சி | வி | ங் | கி | | த் |
| | ற | | | | | | | ழ | | தீ |
| வெ | ள் | ள | ம் | | ரா | ம | ன் | வி | ளை | வு |

### சென்ற வார இணைச்சொற்கள் விளையாட்டு விடைகள்

**கானம்**

1. காடு 2. நந்தவனம் 3. வானம்பாடி

## தமிழோடு! விளையாடு!

### சென்ற வார வார்த்தை தேடு விடைகள்

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 பாரம்பரிய உணவின் பெயர்கள் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ | இ | ட | தா | ர் | பூ | ங் | கா | ர் | உ |
| ரா | ய் | ச | ங் | க | ல் | கி | ங் | லா | ஜ |
| தி | ரா | ம் | ம | ணி | ஒ | யு | ர | ச | கு |
| னை | இ | பா | னி | த் | சா | மை | சி | ஓ | ட |
| ஊ | அ | ரா | பி | ஏ | அ | ஈ | ஊ | ணி | வா |
| ஆ | ப் | ஆ | ழ | ஈ | இ | க | ஈ | ர | ழை |
| சி | க | ப் | பு | சோ | ள | ம் | னை | ப | ங் |
| உ | ப் | ரா | ண | ஹி | தா | பு | கா | கொ | அ |
| ப | க் | ரே | சு | வ | ர | கு | ம | ள் | உ |
| கோ | து | மை | ர் | ஒ | ச | ப | ரி | ளு | ஊ |

## சுடோக்கு விளையாட்டு

கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 6 | | 8 | | | |
| 5 | 8 | | | | 9 | 7 | | |
| | | | | 4 | | | | |
| 3 | 7 | | | | | 5 | | |
| 6 | | | | | | | | 4 |
| | | 8 | | | | | 1 | 3 |
| | | | | 2 | | | | |
| | | 9 | 8 | | | | 3 | 6 |
| | | | 3 | | 6 | | 9 | |

# டிவி பார்தல்

நீதிக் கதை

ஒரு ஊருல ராமுனு ஒரு பையன் வாழ்ந்துட்டு வந்தான்.அவன் எப்பவும் டிவி பாக்குறது, மொபைல் நோன்றதுனே இருப்பான், இந்த கெட்ட பழக்கத்த தடுக்கணும்னு அவுங்க அப்பா ரொம்ப ஆச பட்டாரு.



அதனால அவனோட தாத்தா கிட்ட போயி அவன் செய்யிறத சொன்னாரு,அதைக்கேட்ட அந்த தாத்தா அவனுக்கு நான் புத்தி சொல்றேன்னு சொன்னாரு




மறுநாள் ராமுவை அவுங்க தாத்தா வீட்டில விட்டுட்டு அவுங்க அப்பா போயிட்டாரு.

ராமுவும் அவுங்க தாத்தாவும் பக்கத்து தோட்டத்துல மெதுவா நடந்து போனாங்க.அப்ப அங்க ஒரு சின்ன மாமர செடி இருந்துச்சு.

அத பத்த அந்த தாத்தா ராமு அந்த செடியை கொஞ்சம் பிடுங்குனு சொன்னாரு, உடனே ராமு அந்த



கொஞ்ச தூரம் போனதுக்கு அப்புறமா ஒரு பெரிய செடி இருந்துச்சு,இந்த செடியையும் பிடுங்குனு தாத்தா சொன்னாரு,அதைக்கேட்ட ராமு அத பிடுங்க ஆரம்பிச்சான்,ஆனா அவனால முடியல.



அப்ப அந்த தாத்தா சொன்னாரு ராமு நீ செய்ர கேட்ட பழக்க வழக்கங்கள் இந்த செடியோட வெர்மாதிரி உன் வாழ்க்கைல ஆழமான பாதிப்ப உண்டாக்கும்.

அதனால டிவி பாக்குறது ,அளவுக்கு அதிகமா போன் நோன்றது எல்லாத்தையும் அந்த சின்ன செடி மாதிரி பாதிப்பு அதிகம் ஏற்படுறதுக்கு முன்னாடி தடுத்துடு அப்படினு சொன்னாரு



இது கேட்ட ராமு தன்னோட தவற உணர்ந்து திருந்தி வாழ்ந்தான்







Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH